செ.வெ.எண் : 49 நாள் : 25.05.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**தளர்வுகளற்ற முழு ஊரடங்கு காலத்தில், அத்தியாவசிய பொருளான ஆவின் பால் தங்கு தடையின்றி கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தகவல்**

*******************

கோயம்புத்தூர் மாவட்டம் புலியகுளம், பாப்பநாயக்கன்பாளையம், காந்திபுரம், வடகோவை, ஆர்.எஸ்.புரம், மற்றும் பொன்னையராஜபுரம், தெலுங்குபாளையம், ஆகிய ஆவின் பால் நுகர்வோர் மையங்களிலும், ஆர்.எஸ்.புரம் ஆவின் பால்பண்ணையிலும், கோவை பச்சாபளையம் ஆவின் தலைமை அலுவலகத்திலும் இன்று (25.05.2021) மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.நாகராஜன் இ.ஆ.ப., பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் முனைவர்.ஆர்.நந்தகோபால் இ.ஆ.ப., கோயம்புத்தூர் ஆவின் பொது மேலாளர் திரு.ஆர்.ரவிக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**தொடர்ந்து மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆவின் பால் விலையினை தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்திருந்தவாறு, முதலமைச்சராக பதவியேற்றப்பின் தனது முதல் ஐந்து கையெழுத்தில் ஒன்றாக ஆவின் பால்விலையினை லிட்டருக்கு ரூ.3 குறைத்து உத்தரவிட்டார்கள். அதன்படி, கடந்த 16.05.2021 முதல் ஆவின் பால் விலையானது லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 குறைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஆவின் பால் அட்டை விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் பால் அட்டை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு அரசு அறிவித்த விலைகுறைப்பு போக மேலும் சிறப்பு சலுகையாக அதிகபட்ச சில்லறை விற்பனை விலையிலிருந்து நீல நிற பால்பாக்கெட் லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 வரையிலும், ஆரஞ்சு மற்றும் பச்சை நிற பாக்கெட்டுகளுக்கு ரூ.2 வரையிலும் அதிரடி விலைகுறைப்பு செய்து விற்பனை செய்யப்படுகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்போது 15,000 பால் நுகர்வோர்கள் அட்டைதாரர்களாக பதிவு செய்துள்ளனர். மேலும், கொரோனா வைரஸ் தொற்று பரவல் காலத்திலும் பால் நுகர்வோர்கள் பால் அட்டையினை தடையின்றி பெற நேரில் வருவதை தவிர்க்கும் வகையில் www.aavincoimbatore.com என்ற இணையதளம் வாயிலாக பால்அட்டை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதுபோலவே, சிறப்பு நிகழ்வுகளின்போது மொத்தமாக கேன்களில் பால் வாங்கும் முகவர்களுக்கு 1000லிட்டர் வரையில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.2-ம், 1000லிட்டருக்கு மேல் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ரூ.2.50ம் விலைக்குறைப்பு செய்வதுடன், குறிப்பிட்ட இடத்திற்கு டோர் டெலிவரி செய்யப்படுகின்றது.

அதுபோலவே, தற்போதைய தளர்வுகளற்ற ஊரடங்கு காலத்திலும், கள அளவில் பல்வேறு நிலையில் அலுவலர்களை நியமனம் செய்து, பொதுமக்களின் அத்தியவசியப் பொருட்களில் ஒன்றான பால் பொருட்கள் தடையின்றி கிடைக்கவும், பால் உற்பத்தியாளர்களிடம் போதிய அளவில் பால் கொள்முதல் செய்யவும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்து.

கோயம்புத்தூர் மாவட்டத்தை பொருத்தவரை சிறுவணி மெயின்ரோடு பச்சாபாளையத்தில் செயல்பட்டுவரும் கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 349 பிரதம பால் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிலிருந்து நளொன்றுக்கு சுமார் 1.78 இலட்சம் லிட்டர் தரமான பால்

கொள்முதல் செய்யப்படுகின்றது. அவற்றினை தரம்பிரித்து 250 ml, 500 ml மற்றும் 1000ml ஆகிய அளவில் பாக்கெட்டுகளில் அடைத்து 707 பால் விற்பனை முகவர்கள் மூலமாக தினசரி 1.65 இலட்சம் லிட்டர் பால் விறப்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதனை தொடர்ந்து கண்காணிக்கவும், முறைப்படுத்தும் வகையிலும் மண்டல வாரியாக கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

அதன் தொடர் நிகழ்வாக புலியகுளம், பாப்பநாயக்கன்பாளையம், காந்திபுரம், வடகோவை, ஆர்.எஸ்.புரம், மற்றும் பொன்னையராஜபுரம், தெலுங்குபாளையம், ஆகிய நுகர்வோர் மையங்களிலும், ஆர்.எஸ்.புரம் தடாகம் சாலை பால்பண்ணையிலும், கோவை பச்சாபளையம் தலைமை அலுவலகத்திலும் அலுவலர்களுடனான கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றின் தொடர்சங்கிலியினை அறுக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இந்த தளர்வுகளற்ற ஊரடங்கு காலத்திலும், பொதுமக்கள் பால்வாங்க வரும்போதும், முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியினை கடைபிடிக்க வேண்டும் என **மாண்புமிகு பால்வளத்துறை திரு.சா.மு.நாசர் அவர்கள் தெரிவித்தார்.**

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**